**செய்தி வெளியீடு எண்:689** **நாள்: 14.10.2017**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று ( 14.10.2017) புதுக்கோட்டையில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் தலைமை தாங்கிய தலைமையுரை ஆற்றிய

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!

இந்த இனிய விழாவிலே சிறப்பான கருத்துக்களை வழங்கிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய
இந்த மாவட்டத்தின் மைந்தர்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர்
இந்த நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தை ஒரு மாநாடு போல் நடத்தி
அனைவரது பாராட்டையும் பெற்ற
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர்
டாக்டர் **சி. விஜயபாஸ்கர்** அவர்களே!

அவருக்கு உறுதுணையாக விளங்கிய
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே. வைரமுத்து** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

அரசுச் செயலாளர்,
திரு. **இரா. வெங்கடேசன்** அவர்களே!

திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ப. குமார்** அவர்களே!
ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **எ. அன்வர்ராஜா** அவர்களே!
சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **பி.ஆர். செந்தில்நாதன்** அவர்களே!

கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர்
திரு. **பா.ஆறுமுகம்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே**!**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே**!**

நன்றியுரை ஆற்ற உள்ள
புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **சு. கணேஷ்** அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே,
வருகை தந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களே,
தலைமைக்கழக நிர்வாகிகளே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
பரிசுகள் பெற வந்துள்ள மாணவச் செல்வங்களே,
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உங்கள் மாவட்ட அமைச்சர் திரு.விஜயபாஸ்கர் அவர்கள்
அழகான பாடல் ஒன்றை பாடினார்.
எப்போது பார்த்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையை கிளப்பி பேசுவார். அதை யாரை மையமாக வைத்து பேசுவார் என்று சொன்னால் திரு.விஜயபாஸ்கர் அவர்களை பற்றி தான் அதிகமாக பேசுவார். அப்படி பேசுவருக்கு பதிலடி கொடுக்கின்ற வகையிலே அருமையான பாட்டைப் பாடினார்.

உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது என்று என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் கேட்பார். அதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நிலைகெட்ட மனிதர்களின் நயவஞ்சக நாக்கு என்று பதில் கூறுவார். இது யாருக்கு பொருந்தும் என்பதை நீங்களே சிந்தித்து கொள்ளுங்கள்.

ஆகவே, அருமையான பாட்டு இங்கே பாடி யாருக்கு பொருந்த வேண்டுமோ அவர்களுக்கு பொருந்துவது மாதிரி அந்த பாடலை பாடியுள்ளார்.

கோட்டைக்கொத்தளங்கள்,
ஆன்மிகத்திருத்தலங்கள்,
சுற்றுலா தலங்கள் ஆகியவற்றை அதிகம் கொண்ட
மாவட்டம் இந்த புதுக்கோட்டை மாவட்டமாகும்.

புதுக்கோட்டை என்றால்
புதுக்கோட்டை சமஸ்தானமும்

தொண்டைமான் பரம்பரையும்தான்
இப்போதும் நம் நினைவுக்கு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள '**அன்பில்**' என்ற கிராமத்தில் வசித்த ஒரு பிரிவினர் குடிபெயர்ந்து வந்து,
இங்குள்ள ஆலங்குடியைச் சுற்றியுள்ள
பகுதிகளில் குடியேறி வாழத்தொடங்கினர்.

அவர்கள் வீரத்திலும்,
கடின உழைப்பிலும் சிறந்து விளங்கியதால்,
அப்போது இப்பகுதியை ஆண்ட
நாயக்க மன்னர்களின் படைகளில்
பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்கள்.
அவர்கள்தான் நாளடைவில்
கறம்பக்குடிப் பகுதியை தனித்து ஆளும்
வல்லமை பெற்று, பிறகு தங்கள் ஆட்சிப் பகுதியை விரிவு படுத்தி இந்த புதுக் கோட்டையை தலைநகராகக் கொண்டு ஆளும் தொண்டைமான்களாக உயர்ந்தார்கள்.
இது தான் பிற்பாடு
'**புதுக்கோட்டை சமஸ்தானம்**' என்றானது.

17– ஆம் நூற்றாண்டின் இறுதியில்
**தொண்டைமான் ரகுநாதா** என்பவரால்
ஒரு புதிய கோட்டை கட்டப்பட்டு அதையே புதுக்கோட்டை என பெயரிட்டு அழைத்து வந்தனர். பின்னாளில் அதுவே, மாவட்டத்தின் பெயராகவும் வழங்கத் தொடங்கியது.

**சோழர், பாண்டியர், பல்லவர்,**
**நாயக்கர், முத்தரையர்,**
**வேளீர், தொண்டைமான், போன்ற**
**புகழ்பெற்ற அரச பரம்பரையினர் ஆண்ட பூமி இது.**

'**பல்லவராயன் சீமை**' என்று அழைக்கப்பட்ட
கலச மங்கலம் பல்லவர்களின்
ஆட்சிப்பீடமாக விளங்கியது.

புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் சொந்தமாக ஒரு நாணயத்தை வெளியிட்டார்கள். அதன் ஒருபுறத்தில் தொண்டைமான்களின் வழிபாட்டு தெய்வமாகிய அம்மன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அதுவே,
**புதுக்கோட்டை அம்மன் காசு** என்று அழைக்கப்பட்டது.
ஆதிமனிதன் வாழ்ந்த மண் இது.
அதிக அளவில் குகைக் கோயில்கள்,
ஆயிரத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள்,
தொல்லியல் பழமைச் சின்னங்கள்,
ரோம நாணயங்கள் போன்ற வரலாற்றுப் பின்னணி கொண்ட பழமையான மாவட்டம் இது.

**பெருஞ்சாத்தன், பூத பாண்டியன்,**
**ஆவூர் கிழார், ஆவூர் முலம் கிழார்,**
**மதுரைக்குமரனார்**
முதலிய சங்கப் புலவர்கள்
பிறந்து வாழ்ந்த தமிழ் மண் இந்த புதுக்கோட்டை மண்.

**பருத்தி, பட்டு, நல்லெண்ணெய்** ஆகியவை பெருமளவில் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
புதுக்கோட்டை வாணிக மையமாக
திகழ்ந்ததை **டாலமி, பிலினி** போன்ற
மேலை நாட்டவரின் குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது.

**விராலிமலை, ஆவுடையார் கோயில், திருமயம்,**
**நார்த்தாமலை, குடுமியான்மலை, திருக்கோகர்ணம்,**
**கல்யாண பிரசன்ன வெங்கடேசுவரர் ஆலயம், வேணுகோபால சுவாமி ஆலயம்,**
**பேரையூர் பள்ளிவாசல்** போன்ற இன்னும் பல வரலாற்று சிறப்பு மிக்க ஆன்மிகத் தலங்களையும், சுற்றுலா தலங்களையும் கொண்ட மாவட்டம் இது.

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள
**38** பாரம்பரியமிக்க இடங்களில்,
ஓவியத்திற்கு புகழ் பெற்ற **சித்தன்னவாசல்** இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது சிறப்பம்சம் ஆகும்.

**1974 –**ஆம் ஆண்டு திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் சில பகுதிகளை இணைத்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

ஆனால் 1912 – ஆம் ஆண்டே புதுக்கோட்டை நகராட்சி
உருவாக்கப்பட்டுவிட்டது.

முந்திரி மற்றும் கோடைகால பயிர்கள் இங்கு அதிகமாக பயிரிடப்படுகின்றன.
தமிழ்நாட்டின் முதல்
பெண் சட்டமன்ற உறுப்பினர்
என்ற பெருமைக்குரிய
**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களும்,**
சுதந்திரப் போராட்ட வீரர்
**தீரர் சத்யமூர்த்தி அவர்களும்** புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்தவர்கள்
என்பது இந்த மாவட்டத்திற்கு கூடுதல் பெருமையாகும்.

இத்தனை சிறப்புகளையும் பெருமைகளையும் பெற்ற புதுக்கோட்டை
மாவட்டத்தின் நிலை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இதை ஒரு சிறந்த மாவட்டமாக
உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், இதை மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா அவர்களின் கோட்டையாக உருவாக்கும் பணியை எங்களிடம்
ஒப்படைத்து சென்றிருக்கிறார்கள். அதனால் நாங்கள் புதுக்கோட்டை
மாவட்டத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக் கொள்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
25.08.2015 அன்று சட்டமன்ற பேரவை விதி எண்.110ன் கீழ் அறிவித்து,
ஆணையிட்டபடி,

புதிய அரசு மருத்துவக்கல்லூரியினை
இம்மாவட்டத்தில் திறப்பதற்காக
நான் கடந்த 9.6.2017 அன்று வருகை தந்த போது,
இங்கு கடல் அலையெ மக்கள் கூடியிருந்தனர்.

சரியாக 4 மாதங்கள் கழித்து,
தற்போது நிறுவனத்தலைவர், மக்கள்திலகம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களின்
நூற்றாண்டு விழாவிற்கு இன்று வருகை வந்துள்ளேன்.

உண்மையை கூறவேண்டுமெனில்,
அப்பொழுது கூடிய கூட்டத்திற்கு
சிறிதும் குறையில்லாமல், இன்னும் சொல்லப்போனால், அதைவிட அதிகமாக

நீங்கள் இங்கு கூடியுள்ளதை காணும் பொழுது,

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆட்சிசெலுத்தும்
எங்கள் மீது நீங்கள் கொண்டுள்ள
நம்பிக்கையை நாங்கள் உணர முடிகிறது.

இதனை நீங்கள் எங்கள் ஆட்சிக்குத் தரும்
அங்கீகராமாகவே பார்க்கிறோம் என்பதை
மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில்,
நாங்கள் தொடர்ந்து அடித்தட்டு மக்கள்,
நடுத்தர மக்கள் ஆகியோரின் நலன்களில்
அக்கரை செலுத்தும் அரசாகவே தொடர்ந்து
பாடுபடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
இந்த மாவட்டத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.
புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமல்ல, புதுக்கோட்டையை சுற்றியிருக்கும்
அத்தனை பகுதி மக்களும் இதனால் பயனடைகிறார்கள்.
மருத்துவ சேவையில்
தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு
ஒரு முன் மாதிரியாக திகழ்கிறது.

இந்திய நாட்டிலேயே முதன்முதலாக
மாநிலத்தின் சுகாதாரத் துறைக்கென
தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது
தமிழ்நாட்டில்தான்.

இன்றைய தேதிவரை
இந்த தேர்வு வாரியத்தின் மூலம்
10 ஆயிரத்து 93 மருத்துவர்கள்,
9 ஆயிரத்து 190 செவிலியர்கள்
தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதை
நான் பெருமையாக கூறிக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்கள் மகளிரின் சுகாதாரத்தில்
அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் **''அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்''** என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை
**11** லட்சத்து, **6** ஆயிரம் **பச்சிளம் குழந்தைகள்** பயனடைந்துள்ளார்கள்.

அதேபோன்று

- '**அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம்**',
- **'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்',**
- **'அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம்',**

ஆகியவை ஏழை, எளிய மக்களுக்கு
சுகாதார சேவை வழங்கி வருவதை
நாம் நன்கு அறிவோம்.

நாட்டில் சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் '**தூய்மையான கிராம இயக்கம்**' என்ற ஒரு மகத்தான திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கம் வெற்றியடைய வேண்டுமானால்
நாம் நம்முடைய கிராமத்தையும், நகரத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
இன்று நாம் டெங்கு காய்ச்சலின் தாக்கத்தை அனைத்து துறையினரின் கடும் உழைப்போடு முறியடித்து கொண்டு வருகிறோம்.

டெங்கு காய்ச்சல் பரவாமலிருக்க
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
அரசு விரைந்து செயல்பட்டு வருகிறது.

அரசு மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், பணியாளர்கள், செவிலியர்கள் முனைப்புடன்
அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறார்கள்.

டெங்கு காய்ச்சலை அரசு சவாலாக எடுத்து கட்டுப்படுத்தி வருகிறது.
தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும்
அனைத்து துறை அலுவலர்களும்
கூட்டாக ஆய்வுகள் செய்து வருகின்றனர்.

அரசு மருத்துவமனைகளில் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள்,
பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இது மட்டுமின்றி கூடுதல் படுக்கை வசதிகள், உபகரணங்கள்
ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசு எடுக்கும் இந்த முயற்சியும்
உழைப்பும் மட்டும் போதுமானதா ?
என்றால் அது போதாது என்றுதான் நான் கூறுவேன்.

பொதுமக்களாகிய உங்களுடைய
ஒத்துழைப்புதான் டெங்குவை ஒழிக்க
கூடுதல் பலத்தை அளிக்கும்.
அப்போதுதான் டெங்கு காய்ச்சலை
வேகமாக ஒழிக்க முடியும்.

சுகாதாரத்திலும், கொசு ஒழிப்பிலும்
பாமர மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கொசு உற்பத்தியை
தடுக்கும் நடவடிக்கைகளை
எப்படி மேற்கொள்ளுவது என்று தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்கு விளக்கி
சொல்ல வேண்டும்.

தேவைப்பட்டால் இளைஞர்களும்,
தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும்,
அரசு மருத்துவக் குழுவினருடன்
ஒருங்கிணைந்து செயல்பட்டால்
டெங்கு கொசுவை முற்றிலும் ஒழித்துவிட முடியும்.

எல்லாவற்றையும் அரசியலாக்கி ஆதாயம் தேடுபவர்கள், டெங்கு
காய்ச்சலையும்
அரசியல் ஆக்குவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

மக்கள் சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள நாங்கள்
அவர்களுக்கு
பதில் சொல்லி நேரத்தை வீணாக்காமல்
விரைந்து செயல்பட்டு வருகின்றோம்.

அரசுக்கு ஏற்படும் பிரச்சனைகளை
இரண்டு வகைகளாகப் பார்க்கலாம்.
ஒன்று இயற்கையாக ஏற்படும் பிரச்சினைகள். அதாவது திடீரென்று ஏற்படும் புயல், வெள்ளம், நில நடுக்கம், நோய் போன்ற இயற்கை இடர்பாடுகள்.

இரண்டாவது பிரச்சனை,
**அரசியல் காழ்ப்புணர்ச்சி, மக்கள் விரோத செயல்பாடுகள்** போன்ற செயற்கை இடர்பாடுகள்.

இந்த இரண்டு பிரச்சனைகளையும்
சிறந்த முறையில் எதிர்கொண்டு அவற்றிலிருந்து
மக்களை பத்திரமாக காப்பாற்றி
எந்தவித துன்பமும் ஏற்படாத அளவிற்கு
ஆட்சி செய்யும் வல்லமையை
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் சிலர் தேடி தேடி குற்றச்சாட்டுகளை கண்டுபிடித்து கூறுகிறார்கள்.
மக்களுக்கு ஒரு பிரச்சனையென்றால் அதை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் எதிர்கட்சிகளுக்கும் உண்டு என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

அந்தப் பிரச்சினைகளிலிருந்து
மக்களை விடுவிக்க ஆட்சியாளர்களுக்கு கருத்துக்களைக் கூறலாம்.

அதை விட்டுவிட்டு, அவதூறுகளையும், வதந்திகளையும் அள்ளிவீசி
மக்களை குழப்பத்திலும்,
பீதியிலும் ஆழ்த்துகிற செயல்களை
செய்து கொண்டிருப்பது
மிகவும் தவறான செயலாகும்.

**அப்படிப்பட்டவர்களை, மக்கள் புரிந்து கொள்வார்கள்**

தி.மு.க. மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருக்கும்போது மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல், தொலைநோக்கு சிந்தனையில்லாமல்,

மத்திய அரசின் கட்டளைக்கு எல்லாம்
தலையை ஆட்டிக்கொண்டு,
நீட்டுகிற கோப்புகளில் எல்லாம்
கையெழுத்துப் போட்டதன் விளைவாக,
இப்போது ஏற்படும் பிரச்சனைகளை
போராட்டங்களாக வெடிக்கச் செய்து போராட்டக்காரர்களோடு தாங்களும்
சேர்ந்து பொய்யாக கோஷம் போடுவதை
மக்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மக்களை ஏமாற்றி கோஷம் போட்டவர்களுக்கு
ஒன்றினை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மக்கள்
வாய்ப்புக் கிடைக்கும் போது
உங்கள் வாய்க்கு மட்டுமல்ல,
செயலுக்கும் பூட்டு போடுவார்கள்
என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

**‘‘பொய்யும் புரட்டும் துணையாய்க்கொண்டு பிழைத்தவரெல்லாம் போனாங்க,**
**மூலைக்கு மூலை தூக்கி எறிஞ்சோம்**
**தலைகுனிவாக ஆனாங்க’’**

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் தன் பாடலில்
மக்கள் விரோத மனிதர்களை சாடியிருப்பார்கள்.

எதிர்க் கட்சிகளின் அராஜக போக்கை
எப்படி சமாளிப்பது என்பதை
அப்போதே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நன்கு
தெரிந்து வைத்திருந்தார்கள்.
அவர்களின் அடியை பின்பற்றும் எங்களுக்கும்
கற்று கொடுத்துள்ளார்கள்.

அரசியல் களத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பயன்படுத்திய சமயோசித புத்திதான், அதிமுகவை இந்த அளவிற்கு வளர்த்திருக்கிறது. அதற்கு ஒரு சம்பவத்தை இங்கே நினைவுகூற விரும்புகின்றேன்.

தி.மு.க.விலிருந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
நீக்கப்பட்ட போது,
ரசிகர்களும், தொண்டர்களும்
தமிழ் நாடு முழுவதும் கொந்தளித்தனர்.
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவிப்பதற்கு முன்பே தொண்டர்கள்
ஆர்வமிகுதியால் மதுரையில்
புதிய கட்சிக் கொடியை மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
கட்சிக் கொடி என்று அறிமுகப்படுத்தி
கொடியை ஏற்றினார்கள்.

அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில்
பல இடங்களிலும் அந்தக் கொடிகளை
தொண்டர்கள் ஏற்றினார்கள்.

இது மாற்றுக் கட்சியினருக்கு கோபத்தை
உண்டு பண்ணியது. அந்தக் கொடிகளை கிழித்து எரிந்தனர். கொடி கம்பங்களை வெட்டி சாய்த்தனர். தொண்டர்களை அடித்து துன்புறுத்தினர். இவையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகவும் வேதனையை அளித்தது. இந்தப் பிரச்சனைக்கு முடிவு கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் எண்ணினார்கள்.

“ **எங்கள் புதிய கட்சியின் கொடியை**
**இனிமேல் யாரும் கிழிக்கமாட்டார்கள்,**” என்று
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
நம்பிக்கையோடு கூறியதற்கான காரணம்,
கட்சிக்கொடியை மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் அறிமுகம் செய்தபோதுதான்
அனைவருக்கும் தெரிந்தது.

**அந்தக் கொடியின் நடுவில்**
**பேரறிஞர் அண்ணா அவர்களின்**
**உருவம் பொறிக்கப் பட்டிருந்தது.**

அந்த கொடி
தமிழ்நாடு முழுவதும் ஏற்றப்பட்டபோது
யாரும் அதை கிழிக்க துணியவில்லை.

இப்படி ஒரு பிரச்சனையை
எப்படி சுமூகமாகத் தீர்ப்பது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவர் நன்கு அறிந்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உடலளவில் மறைந்து 30 வருடங்கள் ஆனாலும், இன்றைக்கும் மக்கள் மனங்களில்
நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறார் என்றால்
அவர் தனது ரசிகர்களிடமும், தொண்டர்களிடமும், மக்களிடமும் காட்டிய அன்பும், பரிவும் தான் காரணம்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ரசிகர்கள் இருந்தார்கள்
என்றால் அத்தனை ரசிகர்களையும் அவர் திருப்திபடுத்தினார்கள். சில நேரங்களில் தன்னையும் வருத்திக் கொண்டு ரசிகர்களை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறார்கள்.

இதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் பெற்ற வெற்றிக்கு காரணம்.
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில்
அமெரிக்காவிற்கு சென்றிருந்தார்கள்.
அமெரிக்காவில் தான் தங்கியிருந்த
பால்டிமோர் என்ற இடத்திலிருந்து
நியூயார்க் நகருக்கு ரயிலில் செல்ல
ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாண்புமிகு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள்
ரயில் நிலையத்திற்கு காரில் வந்து
இறங்கிய போது , ஒரு பெண் தலைவரை நோக்கி
கைக்குழந்தையுடன் வேகமாக வந்தார்.

அந்தப் பெண், எம்.ஜி.ஆர் அவர்களை வணங்கியபடி, **“நீங்கள் ரயிலில் செல்ல இருப்பதை அறிந்து, உங்களைப் பார்ப்பதற்காக வெகு தொலைவில் இருந்து மூன்றரை மணி நேரம் காரை ஓட்டிக் கொண்டு வேகமாக வந்தேன். உங்களைப் பார்த்து விட்டேன். மிகவும் சந்தோஷமாக இருக்கிறது,”** என்று கண்களில் மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்..ஜி ஆர் அவர்கள் அப்பெண்ணை அமைதிப்படுத்தி,
அன்பாகப் பேசி அவரது குழந்தையை கொஞ்சியதுடன் அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டு, அப்புகைப்படத்தை அந்தப் பெண்ணின் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு புகைப்பட நிபுணரிடம் கூறி, பெண்ணையும் வாழ்த்தி அனுப்பினார்கள்.

அதற்குள் நியூயார்க் நகருக்கு
செல்ல வேண்டிய ரயில் புறப்பட்டுச் சென்று விட்டது.
**“நீங்கள் அந்தப் பெண்ணிடம் நீண்ட நேரம் பேசியதால் ரயிலை தவறவிட்டு விட்டோம்”,**
என்று உடன் வந்தவர் கூறினார்.

அவரைப் பார்த்து மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிரித்தபடியே,

**“ரயில் வரும், போகும்.
அந்த அம்மா என்னைப் பார்க்க
வெகு தூரத்திலிருந்து கைக்குழந்தையுடன்
தனியாக மூன்றரை மணி நேரம்
காரை ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.**

**அவரை புறக்கணித்து விட்டு
நான் ரயிலில் புறப்பட்டு இருந்தால்
அந்த அம்மாவுக்கு பெரிய ஏமாற்றமாகியிருக்கும். இப்போது பாருங்கள் அந்த அம்மா முகத்தில்
எத்தனை சந்தோஷம்.**

**அமெரிக்கா வந்தும் என்னால் ஒருவரை சந்தோஷப்படுத்த முடிந்தது எவ்வளவு பெரிய விஷயம்,”** என்றார்கள்.

அத்தகைய மகத்தான தலைவர்
வழியில் வந்தவர்கள் நாம்.
எந்தப்பிரச்சனையை யார் எழுப்பி அதை பூதாகரமாக்கினாலும்,
அதையெல்லாம்
நாங்கள் எங்களுக்கான படிக்கட்டுகளாக
மாற்றிக் கொண்டு மேலும் மேலும்
மக்கள் பணிகளை தொடர்ந்து செய்வோம்.

ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை மட்டுமே கூறிக் கொண்டிருக்கும்
அவர்களுக்கு நாங்கள் பதில் கூறுவதில் காலத்தை வீணாக்க விரும்பவில்லை.
**பேச்சைக் குறைத்துக் கொண்டு**
**செயலில் அதிக கவனம் செலுத்துவதால்தான்**
**நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும்**
**பல்வேறு திட்டங்களை அறிவிக்கவும்,**
**செயல் படுத்தவும் முடிகிறது.**
நான் பதவியேற்ற நாளிலிருந்து இன்றுவரை
ஒப்புதல் வழங்கிய கோப்புகளின் எண்ணிக்கையை கண்டு வாயடைத்து
நிற்பவர்களுக்கு
நான் ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றும் நூற்றுக்கணக்கான திட்டங்கள்
வரிசையில் இருக்கின்றன. அவைகள்
விரைவில் செயல்வடிவம் பெறும் போது
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களின் ஆசியால் நடக்கும்
இந்த அரசு எத்தனை வலிமைமிக்க அரசு
என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்...

கடந்த ஆறு ஆண்டுகளில்
இந்த மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு
செய்த சாதனைகள் ஏராளமானவை.
அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும்
இங்கே சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால், இன்றையதினம் எதிர்க்கட்சித்தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், இந்த ஆட்சி என்ன செய்தது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும்,

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை கொண்டாடுகிறார்களே, இந்த மாவட்டத்திற்கு இந்த அரசு என்ன சாதனை செய்தது என்று கேள்வி கேட்கின்றார்கள். அவர்களுக்கு பதிலளிக்கின்ற விதத்திலே இந்த திட்டத்தை விளக்கமாக, அம்மாவினுடைய அரசு செய்த சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

- 105 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 78ஆயிரத்து 28 மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கிய அரசு அம்மா அரசு.

- 1 லட்சத்து, ஆயிரத்து 740 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

- திருமண உதவி திட்டத்தின் கீழ் 24ஆயிரத்து 865 பெண்களுக்கு 84 கோடியே 12 லட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 99.47 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. ஏழை குடும்பத்து பெண்கள் உரிய நேரத்திலே திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் இந்த திட்டம்.

- மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 6 ஆயிரத்து 218 பயனாளிகளுக்கு 9 கோடியே 76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டதின் கீழ் 54 ஆயிரத்து 495 கர்ப்பிணி தாய்மார்களுக்கு 67 கோடியே 33 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

- 30 ஆயிரத்து 46 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 612 கோடியே 37 லட்சம் ரூபாய் வங்கிகள் மூலம் நேரடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

- கறம்பக்குடியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கந்தர்வகோட்டையில் புதிய பலவகை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 44 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 411 குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 76 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 இடங்களில் புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 918 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 இடங்களில் புதிய துணை மின் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

- நெடுஞ்சாலைத்துறை –நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 24 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் 21 பாலங்கள், சாலைப் பணிகள், சிறு பாலப்பணிகள் மற்றும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவின் கீழ் 79 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 252 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 173 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழை எளிய குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 10 ஆயிரத்து 298 பசுமை வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.
- தாய் திட்டத்தின் கீழ் 497 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 4ஆயிரத்து 87 குக்கிராமங்களில் 161 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9 ஆயிரத்து 396 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வறட்சி நிவாரணமாக 89ஆயிரத்து 423 விவசாயிகளுக்கு 81 கோடியே 40 லட்சம் ரூபாய் நிறவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயன் அடைந்துள்ளனர்.
- மேலும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 82 ஆயிரத்து 525 விவசாயிகளின் 1 லட்சத்து 67 ஆயிரத்து 82 ஏக்கர் நிலம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- இதுவரை பாதிப்படைந்த 57 ஆயிரத்து 793 விவசாயிகளுக்கு 138 கோடியே 4 லட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- இது தவிர புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 105 கோடி ரூபாய் விவசாயிகளின் பயிர்க் கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 34 ஆயிரத்து 904 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

- குடிமராமத்து திட்டத்தின் கீழ் 3 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் 113 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 10 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
- விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ் 12 லட்சத்து 80 ஆயிரத்து 205 கன மீட்டர் வண்டல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 11 ஆயிரத்து 260 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.
- பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 11ஆயிரத்து 675 வீடுகள் 128 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டது.
- ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 503 பணிகள், 20 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கட்டுமான பணிகளுக்கென்று 33 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இவை முடிந்த பணிகள்.**

இதை எதற்காக சொல்கிறேனென்றால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சிகள் நம்முடைய அரசை விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். விமர்சனம் செய்கின்றவர்களுக்கு புள்ளிவிவரத்தோடு பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்.அவர்களது நூற்றாண்டு நிகழ்ச்சியின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நான் குறிப்பிட்ட அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, யார் கேட்டாலும், இதை சொல்லலாம், ஆகவே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவம் எம்.ஜி.ஆர்.கண்ட கனவை புரட்சித்தலைவி அம்மா நிறைவேற்றினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இதுவே சாட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இன்று உங்கள் மாவட்டத்தில்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்
சார்பில் 616 கோடியே 57 லட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட
குடிநீர் திட்டங்கள் உட்பட 646 கோடியே
26 லட்சம் மதிப்பிலான 70 பணிகள்
என்னால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
**இப்பணிகள் முடிவடையும் பொழுது, புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.**

மேலும், கூட்டுறவுத்துறை மற்றும் வேளாண்மை
பொறியியல் துறை சார்பில் 4 கோடியே
64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 புதிய திட்டங்களுக்கு
**நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.**

பல்வேறு துறைகளில் சார்பில்
189 கோடியே 22 லட்சம் ரூபாய்
மதிப்பிலான **நலத்திட்ட உதவிகளை**
**31 ஆயிரத்து 918 பயனாளிகளுக்கு**
**வழங்க உள்ளேன்.**

மாண்புமிகு அம்மாவின்
அரசு பொறுப்பேற்றது முதல்
இன்று வரை மாநிலம் முழுவதும்
நிறைவடைந்த 9ஆயிரத்து 802 கோடியே
27லட்சம் ரூபாய் மதிப்பிலான
34ஆயிரத்து710திட்டப் பணிகளைத்
தொடங்கி வைத்தும்

3 ஆயிரத்து 511 கோடியே 49 லட்சம் ரூபாய்
மதிப்பிலான 6 ஆயிரத்து 736 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 13 ஆயிரத்து 313 கோடியே
76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
41 ஆயிரத்து 446 பணிகள்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களில்,
ஆயிரக்கணக்கான திட்டங்களைத் தீட்டினாலும்,

அவற்றை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதில்
அரசுப் பணியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.
அவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு,
தமிழ்நாட்டில் உள்ள சுமார் 12 லட்சம்
அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கு
மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை
வழங்கும் வகையில், ஏழாவது ஊதியக் குழுவின்
பரிந்துரைகளை ஏற்று அதனை அமல்படுத்த
தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இது மட்டுமல்ல, ஏழை, எளிய மக்களின்
நலனை கருத்தில் கொண்டு,
அவர்கள் கடினமாக உழைத்து சம்பாதித்து
வாங்கிய வரன்முறைப்படுத்தாத
மனைப் பிரிவுகள் / மனைகள்
ஆகியவற்றை வரன்முறைப்படுத்த

**“அனுமதியற்ற மனைப் பிரிவுகள் மற்றும்
மனைகள் வரன்முறைப்படுத்தும்”**
ஒரு புதிய திட்டம் அமலுக்குக்
கொண்டு வரப்பட்டுள்ளது.

அதற்கான அனுமதிக் கட்டணங்களும்
வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.
இது நிச்சயம் ஏழை, எளிய மக்களின்
வயிற்றில் பால் வார்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

எதிர்கட்சிகள் என்றால் ஆளுங்கட்சியின்
ஒவ்வொரு அசைவுகளையும் அரசியல் ஆக்கி
குறை கூறிக்கொண்டே இருக்கவேண்டும் .

அதுதான் எதிர்கட்சிகளின் இலக்கணம்
என்ற மாய பிம்பத்தை உருவாக்கி விட்டார்கள். எதிர்கட்சிக்காரர்களின்
கண்களுக்கு ஆளுங்கட்சியின் ஆக்கப்பூர்வமான திட்டங்களும், செயல்களும்
கூட கெட்டதாகவே தெரிகிறது என்றால் குறைபாடு அவர்களின்
கண்களில்தான் இருக்க வேண்டும்... அல்லது அவர்கள் சார்ந்திருக்கின்ற
கட்சியிடம் தான் இருக்கவேண்டும்.

கண்டதெற் கெல்லாம் ஆளுங்கட்சியை குறைகூறுபவர்கள் தாங்கள் ஆளுங்கட்சியாக
இருந்த காலத்தில் செய்த தவறுகள்தான்,
இப்போது அவர்களின் கண்களுக்கு முன்னால் அழுக்கு கண்ணாடியாக இருந்து,
நல்லவற்றைக்கூட அழுக்காகக் காட்டுகிறது.
முதலில் அழுக்கு எங்கே இருக்கிறது
என்பதைக் கண்டறிந்து,
அதை சுத்தப்படுத்த வேண்டும்.

**இதை கூறும்பொழுது எனக்கு ஒரு**
**கதை நினைவிற்கு வருகிறது.**

புதிதாகத் திருமணமான ஒரு தம்பதியினர்
ஒரு நகரத்துக்கு குடியேறினார்கள்.

அடுத்த நாள் காலையில் இருவரும்
அவர்களது வீட்டின் ஒரு அறையில் அமர்ந்து
தேனீர் குடித்துக் கொண்டிருக்கும் போது,

**பக்கத்து வீட்டு பெண்**
**துணிகளை துவைத்து காயப் போட்டுக்கொண்டிருப்பது**
**ஜன்னல் வழியாக தெரிந்தது.**

அதைப் பார்த்த மனைவி கணவனிடம்,
**அங்கே பாருங்கள் அந்த பொண்ணுக்கு**
**துணி துவைக்கவே தெரியவில்லை.**
**துணியெல்லாம் அழுக்காக கருப்பு புள்ளிகளாக இருக்கிறது** என்று கூறினாள்.

ஜன்னல் வழியே பார்த்த கணவன்
மனைவியிடம் ஒன்றுமே சொல்லவில்லை.

இப்படியே, பக்கத்து வீட்டு பெண்
துணிகளைத் துவைத்து காயப்போடுவதும்,
அதை ஜன்னல் வழியாக மனைவி பார்த்து

அவளுக்கு  துணி துவைக்கவே
தெரியவில்லை  என்று சொல்வதும்,
அதற்கு கணவன்  ஒன்றுமே சொல்லாமல்
இருப்பதும் பல நாட்களாகவே
நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் மனைவி மிகவும் ஆச்சரியமாகக் கணவனிடம் சொன்னாள்,

**“இங்க பாருங்க,  பக்கத்து வீட்டு பொண்ணுக்கு இப்போதுதான்  துணி துவைக்க  தெரிந்து இருக்கிறது,
ஒரு புள்ளிகூட இல்லாமல் துணிகளை
சுத்தமாக  துவைத்து  காயப்போட்டிருக்கிறாள்”** என்றாள்.

அதற்கு கணவன்,
**“அது வேறு ஒன்றும் இல்லை
இன்றைக்கு காலையில்தான்
நம்ம வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை
எல்லாம் நான் துடைத்தேன்,”** என்றான்.
இப்படித்தான் பலர்
தங்கள் வீட்டு அழுக்கு கண்ணாடியை
துடைக்காமல்,

அடுத்த வீட்டில் இருக்கும்
**தூய்மையை**
அழுக்கு என்று
கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

**கருப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் பார்ப்பதெல்லாம் கருப்பாகத்தான் தெரியும்.**

**சிவப்பு கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் பார்ப்பதெல்லாம் சிவப்பாகத்தான் தெரியும்.**

நிறமில்லாத **சாதாரண கண்ணாடியைப்**

போட்டுக் கொண்டு பார்த்தால்தான் பார்க்கும் **காட்சிகள் உண்மையாக தெரியும்.**

**குறை கூறுபவர்கள் இதை நன்கு புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.**

எதிர்க்கட்சித்தலைவர் அடிக்கடி இப்பொழுது விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார். இன்றைக்கு ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சியைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார். இந்த ஆட்சி டெங்கு ஆட்சி என்று சொன்னார். அதற்கு மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு ஓ.எஸ்.மணியன் அவர்கள் தகுந்த கருத்தைச் சொன்னார். அவருடைய ஆட்சி என்ன ஆட்சி என்பதை அழகாக சொன்னார், அதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த ஆட்சியை களங்கப்படுத்துவதற்காக இப்படிப்பட்ட கருத்தைச் சொல்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு மக்கள் பணி செய்வதிலே முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது.

டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு டெங்கு கொசுவிலிலிந்து அந்தக் காய்ச்சல் ஏற்படுகின்றது. இந்த டெங்கு கொசு நல்ல தண்ணீரில் வளருகிறது, உருவாகிறது. பொதுமக்கள் தங்கள் வீடுகளிலே சேமித்து வைக்கும் தண்ணீரை மூடி வைக்கவேண்டும். தண்ணீரை முடிவைக்காவிட்டால், அல்லது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைக்காவிட்டால், பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே தேங்கி நின்றால், அந்த டெங்கு கொசு அங்கேயெல்லாம் முட்டையிட்டு, ஏடிஎஸ் என்ற புழு உற்பத்தியாகி, அதன் மூலமாக கொசு அங்கே உருவாகின்றது. ஒரு கொசு 1500 முட்டைகளையிடுகிறது. இப்படி ஒரு கொசு 1500 முட்டையிடும்பொழுது மீண்டும் அது கொசு உற்பத்தியானால், எவ்வளவு உற்பத்தியாகும் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சாக்கடை நீரிலிருந்தோ, அந்தக் குப்பையிருந்தோ தான் அந்தக் கொசு உருவாகிறது, அது கடித்துத்தான் இந்தக்

காய்ச்சல் வருகிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஆகவே, நல்ல தண்ணீரிலிருந்து தான் இந்தக் கொசு உருவாகிறது. அதை பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கினால்தான் கொசு ஒழிப்புத் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியும். அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு முழுமூச்சுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து எல்லா மாவட்டத்திற்கும் சென்று அங்குள்ள அதிகாரிகளை சந்தித்து, மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். காய்ச்சலில் யாராவது பாதிக்கப்பட்டால், சிகிச்சை அளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு, இந்தக் காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறது இந்த அம்மாவினுடைய அரசு. அதுமட்டுமல்ல. எந்தக் காய்ச்சல் வந்தாலும், அந்தக் காய்ச்சல் ஏற்பட்டவுடயே அருகாமையில் இருக்கின்ற மருத்துவர்களை அணுகி, ரத்தப்பரிசோதனை செய்து, என்ன காய்ச்சல் என்று கண்டறிந்து, அதற்கேற்றவாறு சிகிச்சை எடுத்துக் கொண்டால் நிச்சயமாக குணமடையலாம். அதுமட்டுமல்ல, இதைக் கட்டுப்படுத்துவதற்காக அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எளத்து வருகிறது. இன்றைக்கு ஆங்காங்கே கொசு மருந்துகள் அடிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக இன்றைக்கு ஆங்காங்கே விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இன்றைக்கு நிலவேம்பு கஷாயம் பல்வேறு இடங்களில், மருத்துவமனை, பள்ளிகள், பேருந்து நிலையம், ரயில் நிலையம் போன்ற மக்கள் அதிகமாக கூடுகின்ற பகுதியில் நிலவேம்பு கஷாயம் அரசின் மூலமாக இலவசமாக கொடுக்கப்பட்டு, இந்த டெங்கு காய்ச்சலை குணப்படுத்த முடிகின்றது. ஆகவே அரசை பொறுத்தவரைக்கும் இன்றைக்கு காய்ச்சலை ஒழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, சீதோஷ்ண நிலை

மாறுபடுகின்றபொழுது, இப்படிப்பட்ட காய்ச்சல் ஏறபடுகின்றது. இதை பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்போடு அம்மாவினுடைய அரசால் இந்தக் கொசு ஒழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைவைத்து பலபேர் அரசியலாக்கப் பார்க்கிறார்கள். ஒவ்வொன்றாக பிடித்துக் கொள்கிறார்கள். இன்றைக்கு அரசியலாக்குவது இதுதான், வேறு ஒன்றுமே கிடைக்கவில்லை. அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே பருவமழை நன்றாக பெய்து கொண்டிருக்கிறது. 25 ஆண்டுகாலமாக பாலாற்றிலே தண்ணீர் வரவில்லை. இன்றைக்கு பாலாற்றில் தண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. தமிழ்நாடு முழுவதுமுள்ள விவசாய பெருங்குடிமக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். மேட்டூர் அணை 98 அடி வந்துவிட்டது. நான் வருகின்றபொழுது சொன்னார்கள், 24000 கனஅடி அணைக்கு வந்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஒரு நான்கைந்து நாட்களில் இதேபோல் தண்ணீர் வந்தால் அணை நிரம்பும். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுடைய பிரச்சினைகள் முழுமையாக தீர்த்து வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள், விவசாயம் செய்வதற்கான பயிர்க்கடன் இன்றைக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த அளவுக்கு கொடுக்கப்படுகின்றது. விவசாயிகளுக்கு விதைகள், உரம் ஆகியவை கொடுக்கப்படுகின்றது. தகுந்த நேரத்திலே அனைத்து வசதிகளும் விவசாய பெருங்குடிமக்களும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் விவசாயிகள் பெரும்மகிழ்ச்சி அடைகிறார்கள்.

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக, ஆங்காங்கே உள்ள ஏரி, குளங்களில் இருக்கின்ற ள் வண்டல்மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளிக் கொள்ளலாம் என்ற ஆணையை நாங்கள் வெளியிட்டோம். அதன் மூலமாக, ஏரிகள், குளங்களிலே விவசாய பெருமக்கள் வண்டல் மண்ணை அள்ளி, அவர்களது நிலத்திற்கு இயற்கை உரமாக இட்டிருக்கின்றார்கள். அவர்கள் வண்டல்மண் அள்ளிய காாணத்தினால், குளங்கள் ஆழப்பட்டன. இன்றைக்கு பருவமழை பெய்த காரணத்தினாலே, அந்தக் குளத்திலே அதிகமான நீர் இருப்பை பார்க்கின்றோம். ஆகவே, அம்மாவினுடைய அரசு குடிமராமத்து திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்ன்

இந்த புதுக்கோட்டை மாவட்டம் வீர இளைஞர்கள் நிறைந்த மாவட்டம். இந்த ஜல்லிக்கட்டு இந்த மாவட்டத்திலே சிறந்து விளங்குகின்ற ஒரு வீரவிளையாட்டு. இங்கே மாண்புமிகு அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த புதுக்கோட்டை மாவட்டத்திலே, 80 இடங்களிலே ஜல்லிக்கட்டு விளையாட்டு நடைபெற்றது. இந்த வீரவிளையாட்டு வீரர்கள் நிறைந்த மாவட்டம் இந்த மாவட்டம். இந்த மாவட்டத்தில் சித்தன்னவாசல், திருமயிலம் கோட்டை, கடற்கரை ஓரமாக மீனவர்கள் வசிக்கின்ற பிரசித்தி பெற்ற இந்த இடத்திலெல்லாம் வீரவிளையாட்டு, ஜல்லிக்கட்டு விளையாட்டு மிக பிரம்மாண்டமாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

நாங்கள் இந்த அரங்கங்கள் எல்லாம் பார்த்தோம். இந்த அரங்கங்கள் எல்லாம் எதற்காக அமைந்திருக்கின்றது என்று சொன்னால், எதிர்க்கட்சியெல்லாம், இன்றைக்கு இந்த ஆட்சி என்ன சாதனை செய்தீர்கள் என்று கேள்வி கேட்கிறார்கள், அவர்களுக்கு பதில் சொல்கின்ற விதத்திலே 23 அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த 23 அரங்குகளிலும், அம்மாவினுடைய அரசு என்ன சாதனை செய்திருக்கின்றது என்பதை

இந்த அரங்குகள் வாயிலாக நிரூபித்துக் காண்பித்துக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு துறையிலும் என்னென்ன சாதனை செய்திருக்கின்றோம் என்பதை இந்த அரங்கத்திலேயிருந்து பார்த்துக் கொள்ளலாம். இங்கே ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்திருக்கிறீர்கள். அத்தனை பேரும் பார்க்கின்றபொழுது, அம்மாவினுடைய அரசு ஒவ்வொரு துறையிலும் என்ன சாதனை படைத்திருக்கிறது என்பதை இந்த அரங்குகள் வாயிலாக தெரிந்து கொள்ளலாம். ஆகவே, எதிர்க்கட்சிகள் சொல்வது அத்தனையும் பொய். அம்மாவினுடைய அரசு ஒன்றுதான் மக்கள் பணி செய்கின்ற அரசு, மக்களுக்கு தேவையான திட்டங்களை கொடுக்கின்ற அரசு, எந்த திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கின்றதோ அத்தனை திட்டங்களையும் அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இங்கே உங்கள் மாவட்ட அமைச்சரோடு சென்று பார்க்கின்றபொழுது, புதுக்கோட்டை பாஸ்கரன் அவர்களது காளையைப் பார்த்தோம். மிகச் சிறப்பாக ஒரு நல்ல உறுதியோடு, பார்ப்பதற்கு அழகாக ஜல்லிக்கட்டு நடக்கின்றபொழுது அந்தக் காளைக்கென்று தனி பெருமை இருப்பதாக அவர் குறிப்பிட்டார். ஏன்றைக்கும் இந்த மண்ணிலே ஜல்லிக்கட்டு நிலைத்து நிற்கும், அந்த விளையாட்டு வீரர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்களும், உங்கள் மாவட்ட செயலாளர், வீட்டுவசதியுனுடைய தலைவரும், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். ஒருசில கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்ற செய்தியை தெரிவித்து, அவை எவைஎவை என்பதை உங்களிடத்திலே வாசிக்க கடமைப்பட்டிருக்கிறேன். (புதுக்கோட்டை மாவட்ட அறிவிப்புகள்)

இறுதியாக,
புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. இதுவரை 18 கூட்டம் முடிந்துள்ளது 19வது கூட்டம் நடைபெற்று வருகிறது.

விழா முடிந்து பொதுமக்களும்,
தொண்டர்களும், மகளிரும்,
இளைஞர்களும், பத்திரமாக
வீடுபோய்ச் சேரவேண்டும்.
வாகனத்தில் செல்பவர்கள் கவனமாக செல்லவேண்டுமென்று
அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவை சிறப்பாக
ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு
எனது மனமார்ந்த பாராட்டுகளை
தெரிவித்துக் கொள்கிறேன்.
மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே !
இன்றும் நமதே !
நாளையும் நமதே !

வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ் !
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**